‘சமூகநீதிக் கருத்தாய்வில் தேசிய அளவில் புதுப்பாதை வகுத்தவர்’

# ராஷ்டிரிய ஜனதாதளம் கட்சியின் தேசியத் தலைவர் லாலுபிரசாத் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜீன்.12–

ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் தேசிய தலைவர் லாலு பிரசாத் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் தேசிய தலைவர் லாலு பிரசாத் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**விளிம்புநிலை மக்களை அதிகாரத்தின் மையத்தில் இருத்திய இந்திய அரசியலின் முன்னோடித் தலைவர்களில் ஒருவர் லாலு பிரசாத் அவர்கள். மண்டல் ஆணையப் பரிந்துரைகளை உறுதியாக நடைமுறைப்படுத்தியும், மதவாத சக்திகளுக்கு எதிரான வலுவான அரணாக இருந்தும் சமூக நீதிக் கருத்தாடலில் தேசிய அளவில் புதுப்பாதை வகுத்தவர் அவர்.**

**அவர் நீண்டகாலம் நல்ல உடல் நலத்துடன் திகழ விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளே நம் நாட்டின் செல்வம்! கல்வியே குழந்தைகளுக்கும் நிரந்தர செல்வம்!

# குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிடுவோம்!

## குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



**சென்னை, ஜீன் 12 –**

**குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட செய்தியில் குழந்தைகளே நம் நாட்டின் செல்வம், கல்வியே குழந்தைகளுக்கு நிரந்தர செல்வம் என்றும் குழந்தை தொழிலாளர் முறையை அகற்றிடுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின செய்தி – வருமாறு:

உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஆண்டுதோறும் ஜீன் மாதம் 12ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் ஓர் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பால் (ILO) அங்கீகரிக்கப்பட்ட இந்நாள், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் கடைப்பிடிக்கப்படுகின்றது.

நம் சமுதாயத்தின் எதிர்கால முன்னேற்றம், இன்றைய குழந்தைகளை சார்ந்துள்ளது. அவர்கள் தான் நாளைய நாட்டை வழிநடத்தும் செல்வங்கள். துள்ளித் திரிந்து விளையாடி, பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய இனிய பருவத்தில் அவர்களை குழந்தை தொழிலாளராக பயன்படுத்துவது சட்டத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் முற்றிலும் புறம்பானது. குழந்தைகளின் அறிவை வளர்த்து அவர்களின் திறமைகளை மேம்படுத்தி, நல்ல குடிமக்களாக உருவாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஆனால், ஒரு சில குழந்தைகள் பள்ளிக்குப் போகாமல், தொழிலாளர்களாக மாறும் போது, அவர்கள் கல்வி, விளையாட்டு, சுதந்திரம் மற்றும் அவற்றால் கிடைக்கக்கூடிய நல்ல எதிர்காலம் ஆகியவற்றை இழக்கிறார்கள். ஒரு எதிர்கால சாதனையாளரை இழப்பது என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. எனவே, அத்தகைய சூழலை தடுப்பது மிக அவசியம். கல்வி கற்கும் உரிமையை அனைத்து குழந்தைகளும் பெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை முழுமையாக ஒழிக்கவும், அனைத்து குழந்தைகளின் கல்வி கற்றலையும் உறுதி செய்யும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்காக அரசு மாநில செயல் திட்டத்தையும், நிலையான இயக்க நடைமுறைகளையும் உருவாக்கியுள்ளது. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 தமிழ்நாட்டில் மிக கடுமையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்து உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், தொழில் நிறுவன உரிமையாளர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, அனைத்து அரசு அலுவலகங்களிலும், அரசு ஊழியர்கள், குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்று, குழந்தைத் தொழிலாளர் இல்லாத சமுதாயத்தை உருவாக்க சீரிய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

குழந்தைகள் தரமான கல்வி கற்கவும், பெற்றோர்களின் சுமைகளை குறைக்கவும், தமிழ்நாடு அரசு கட்டணமில்லா கல்வி, விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள், சீருடைகள், காலைச் சிற்றுண்டி மற்றும் சத்தான மதிய உணவு, காலணிகள், பேருந்து பயண அட்டைகள், மிதிவண்டிகள் போன்ற பல நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் சீரிய முயற்சிகளுக்கு பொது மக்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பினை நல்கி, குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற விழிப்பு ணர்வுடன், தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்ற ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று உறுதியேற்போம்.

**குழந்தைகளே நம் நாட்டின் செல்வம் !**
**கல்வியே குழந்தைகளுக்கு நிரந்தர செல்வம்!**
**குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவோம் !**
**குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிடுவோம் !**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை ரூ.6 கோடியே 25 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 25 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 11–06–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எம்.எஸ்.விலங்கையன், சடையாண்டி நகர், போடி, தேனி மாவட்டம். | 25,000/– |
| 2. | இரா.சீனிவாசன், சித்தநாயக்கன்பாளையம், கரடிவாவி வழி, கோவை | 25,000/– |
| 3. | எம்.பழனிசாமி, கடம்பூர், குத்தியாலத்தூர், சத்தியமங்கலம், ஈரோடு | 25,000/– |
| 4. | சி.ராஜாமணி, 23வது வார்டு, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம். | 25,000/– |
| 5. | பி.தங்கராஜ், பாலசமுத்திரம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 6. | அ.ஜகுபர்சாதிக், மேற்கு தெரு, புதுவலசை, மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 7. | கு.பகவதிராஜ், பேரூர் முன்னாள் அவைத்தலைவர், மேலகரம், தென்காசி | 25,000/– |
| 8. | க.கருப்பசாமி, வேம்படிகாலனி, பத்மநாபமங்கலம், தூத்துக்குடி மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

பூமிதான சட்டப் பிரிவின்படி

# 141 பயனாளிகளுக்காக 6.36 ஏக்கர் பூமிதான நிலம் வழங்கல்!

## அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 12-

பூமிதான வாரியக் கூட்டம் 10.06.2025 அன்று சென்னை சேப்பாக்கம் ஐந்தாம் தளத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூட்ட அரங்கில் நடைபெற்றது. பூமிதான வாரியத் தலைவர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் வாரியக் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாரியக் கூட்டத்தில் மொத்தம் 58 கூட்டப் பொருள்கள் விவாதத் திற்கு வைக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

● இதன்படி திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 1755 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கப்பட்டு வீட்டுமனை இல்லாதவர்களுக்கு வீட்டுமனை பயன்பாட்டிற்காக 35.01 ஏக்கர் விஸ்தீரண பூமிதான நிலங்களில் வீட்டுமனை விநியோகப் பத்திரம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

● கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 3 பயனாளிகளுக்கு விவசாய பயன்பாட்டிற்காக 3.00 ஏக்கர் விஸ்தீரண பூமிதான நிலங்களில் மறுவிநியோகப் பத்திரம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

● பூமிதான சட்டப்பிரிவு 19(1) -இன்படி 141 பயனாளிகளுக்கு வீட்டு மனைக்காக 6.36 ஏக்கர் பூமிதான நிலம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

● 4 இனங்களுக்கு அரசு பொது நோக்கத்திற்காக 4.71 ஏக்கர் விஸ்தீரண பூமிதான நிலம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வாரிய அலுவல் சார்ந்த உறுப்பினர்களான அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பாக கூடுதல் செயலாளர் திருமதி. வெ. பத்மா, நிலச்சீர்திருத்த ஆணையர் த.ந.ஹரிஹரன், நில அளவை மற்றும் நிலவரி திட்ட இயக்குநர் மற்றும் நிலச்சீர்திருத்த இயக்குநர் / உறுப்பினர் செயலர்/ தமிழ்நாடு பூமிதான வாரியம் (மு.கூ.பொ) ப.மதுசூதன் ரெட்டி மற்றும் இதர அலுவல் சார்ந்த உறுப்பினர்களான இயக்குநர் வேளாண்மைத்துறை சார்பாக திருமதி. கே.சோபியா சத்தியவதி ஆகியோர் கலந்து கொண்டார்கள். மேலும், இவ்வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களான திருவாளர்கள் கே.ஆர்.கண்ணன் மற்றும் அ.உறுமத்தான் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



சென்னை எழிலகத்தில் நேற்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி தலைமையில் 5வது தமிழ்நாடு பூமிதான வாரியக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலச் சீர்திருத்த ஆணையர். டி.என்.ஹரிஹரன், நிலச் சீர்திருத்த இயக்குநர் மதுசூதன் ரெட்டி, பூமிதான வாரிய உறுப்பினர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் துறை சார் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் அருகே வீரசோழபுரத்தில் பொதுப்பணித்துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 08.06.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவா, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பரிதி, முதன்மை பொறியாளர் மணிகண்டன், செயற்பொறியாளர் செல்வகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.




திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தண்டரை ஊராட்சியில் மகளிர் விடியல் பயணம் செல்லக் கூடிய பேருந்து T 17/A (திருவண்ணாமலை – மதுராம்பட்டு) புதிய நகர பேருந்தை சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் திருவண்ணாமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் சி.மாரிமுத்து, ஒன்றிய துணை செயலாளர் தண்டரை பாபு, மாவட்ட பிரதிநிதி சந்திரசேகர், கணேசன் மு.கவுன்சிலர், மு.தலைவர் வெங்கடேசன், கிளை கழக செயலாளர்கள் விஜயன், செல்வராஜ், குமார், தொ.முன்னேற்ற சங்கத்தின் மாநில துணைத்தலைவர் மற்றும் திருவண்ணாமலை மண்டல பொது செயலாளர், தொ.மு.ச மனோகரன், திருவண்ணாமலை போக்குவரத்து கிளை மேலாளர் – 2, பணிமனை தொழிற்சங்க நிர்வாகிகள், அலுவலர்கள், கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.